

# சுங்கை பூலோ – செமந்தான் எம்ஆர்டி முதற்கட்ட பணி பூர்த்தி

கோலாலம்பூர், நவ. 27–

கிள்ளான் பள்ளத்தாக்கில் மேற்கொள்ளப்பட்ட நீண்ட தூர, சுங்கைபூலோ மற்றும் செமந்தான் இடையிலான எம்.ஆர். டி.யின் முதல் கட்டப்பணி, கூடுதல் செலவு இன்றி குறிப்பிட்ட தேதிக்கு முன்னதாக நிறைவடைந்துள்ளது.

முழு திட்டமும் 2017 ஜூன் மாதம் பூர்த்தியாகி செயல்படும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் திட்டத்தின் முதற்கட்ட பணி பூர்த்தியடைந்து டிசம்பர் 16ஆம் தேதி செயல்படவிருக்கிறது என்று எம்.ஆர்.டி. போக்குவரத்து பிரிவு இயக்குநர் டத்தோ நாஜ்முடின் அப்துல்லா தெரிவித்தார்.

நகரங்களுக்கு இடையில் போக்குவரத்து வசதியை மேம்படுத்த, வெ. 2,300 கோடி செலவில், 51 கி.மீ. நீளத்திற்கு மேற்கொள்ளப்பட்ட ரயில் திட்டத்தில், மொத்தம் 31 ரயில் நிலையங்கள் இடம் பெற்றிருக்கும். இது நமது பிரதமர் டத்தோஸ்ரீ நஜீப் துன் ரசாக் முன்னெடுத்த திட்டமாகும். இப்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் மக்கள் பயனடைவார்கள்.